முருகப்பெருமான் துணை

**மகான் மூர்த்தி நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.08.2022**, சனிக்கிழமை

1. தவசியே தருமம் காக்க வந்த
தனிப் பெருங் கருணை வடிவான
அவதாரமே ஆறுமுக அரங்கனே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது யாளி திங்கள்
குறைவிலா சதுர்திகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 04 நாள், 20.08.2022 சனிக்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு மூர்த்தி நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை நெறி காட்டும் தவசி
ஞானமே உலகை மீட்பதாகும்
ஞானபண்டிதனார் சக்தியாகத் தரும்
4. தருகின்ற தீட்சை பலத்தை
தரணியோர் வரமாகப் பெற
வருகின்ற காலம் மக்களுக்கு
வளமான வண்ணம் மாறும்
5. மாறுமே மகிழ்ச்சிக் குன்றாத
மனபலம் நல் இல்லறமாக
வாரிசு பலன்களும் கூடி
வருவாய்க்கு எந்த தடையும் இல்லா
6. தடையிலா சகல வளமுடன்
தன் குடி காப்பதுடன் மற்றவர்க்கும்
தடையிலா உதவி நிற்கும்படி
தன்னலமிலா சேவை கூடி
7. கூடியே இல்லறம் வழியே
குருவருள் பெருக ஞானவானாக
நாடியே மேன்மைகள் அடைவர்
நம்பிக்கைதரும் நல்லவர்கள் ஆக
8. ஆகவே நடத்தை ஒழுக்கம் யாவிலும்
அறம் மிக்கவர்களாகத் தேறி
மகான் அரங்கன் மூலமாக
மாதருமத்தின் சக்தி அறிந்து
9. அறிந்துமே அன்னதான சேவை
ஆற்றல்பட வறுமை தனை
தெரிந்த வண்ணம் பலருக்கு நீக்கி
தேவைக்கேற்ப கல்வி மருத்துவம் என

10. என சகல வகை உதவிகளும்
இனிதே சேவையாகச் செய்து
தானாக ஞான சித்திக்கு
தவராஜன் வழித் தொடர்ந்து வருவர்

11. வருகவே மாற்றம் உலகம்
வடிவேலன் வெளிப்பாடு கண்டு
முருகப்பெருமான் தலைமை ஏற்ற
முழுமையான ஞான ஆட்சி அடையும்
அருளாசி முற்றே

–சுபம்–